**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் - 2023**

-----------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் (''நிறுவனம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்கான தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.தே.க.ச) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையினை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்கு அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள ், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | குறித்த நியமத்துடன் தொடர்புடனான இனக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 பந்தியின் பிரகாரம் தொத்துக்கள் மற்றும் பொறுப்பக்கள் பதிலீடு செய்யக்கூடாத போதும் செலுத்த வேண்டிய மீதிக்கிடையே முறையே ரூபா 16,508,536 மற்றும் ரூபா 9,956,010 வரவு மற்றும் செலவு மீதிகள் குறிப்பிடப்பட்டு இருந்தன. | இந்த மீதிகளை தீர்க்க தேவையான நடவக்கை எடுக்கப்பட்டு வருவதென. | தொத்துக்கள் மற்றம் பொறுப்பக்களின் சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் 35 பந்தியின் பிரகாரம் முதல் கிடைப்பனவு முதலில் விநியோகிக்கும் முறை (FIFO) அல்லத நிறையிடப்படட் சராசரி முறை (WAC) ஆகிய இரண்டு முறைகளில் ஒரு முறையை தெரிவு செய்து பண்டங்களின் கிரயத்தை மதிப்பிட வேண்டிய போதும் அவ்வாறு செய்யாது எளிய சராசரி கிரய முறையை பயன்படுத்தி 2023 திசெம்பர் 31 திகதி பண்டக இருப்பு | காணப்படும் கணனி முறைமையில் நிறையிடப்பட்ட சராசரி கிரயத்தின் பிரகாரம் இருப்பு மீள்மதிப்பீடு செய்ய தேவையான வசதிகள் இல்லாததால் எளிய சராசரி முறை இருப்பு மீள்மதிப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதிகளைக் கொண்ட புதிய கணனி முறைமையை இஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதென. | கணக்கீட்டு நியம பிரகாரம் இருப்புக்களின் கிரயம் கணிப்பிடப்பட வேண்டும். |

ரூபா 47,484,214 இற்கு மதிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் கடன்கொடுனர் மீதி ரூபா 77,421,924 ஆக வேண்டிய போதும் அந்த கடன்கொடுனர் நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 16,562,135 மீதி பதிலீடு செய்த பின்னர் கடன்கொடுனர் மீதியாக ரூபா 61,059,304 காண்பிக்கப்பட்டதால் நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுனர் மற்றும் கடன்பெறுனர் ரூபா 16,562,135 வீதம் குறைந்திருந்தன. | நிதிக்கூற்றுக்களில் கடன்படுனர் மீதியாக பேரேட்டில் குறிப்பிடப்படும் மீதி ரூபா 74,544,110 காண்பிக்கப்பட்டு உள்ளதுடன், அவற்றில் ஐயக்கடன் ஒதுக்கத்திற்கு ஆராண்டை விஞ்சிய கடன் மீதிகளிற்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு ரூபா 50,748,008 குறைக்கப்பட்ட பின்னர் தேறிய பெறுமதியாக ரூபா 23,796,102 காண்பிக்கப்பட்டு உள்ளதென. | நிதிக்கூற்றுக்களில் கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் மீதிகள் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 தகிதிவரை நிலவிய இனங்காணப்படாத நேரடி வங்கி வைப்புக்கள் ரூபா 4,581,481 இனை மீளாய்வாண்டில் இனங்காண நடவடிக்கை எடுக்காது செலுத்த வேண்டிய செலவாக நடைமுறை பொறுப்புக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த இனங்காணப்படாத வைப்புக்களின் பெறுமதியை ரூபா 4,581,481 வரை குறைக்கப்பட்டுள்ளது. குறித்த வைப்பாளர்களை இனங்காண தேவையான இணக்கங்கள் தொடர்ந்து செய்யப்பட்டு வருவதென. பட்டியல் இலக்கங்கள் இல்லாது வங்கிக் கணக்கிற்கு பணம் சேகரிக்க அனுமதி வழங்காதிருக்க வங்கியை அறிவுரித்தியுள்ளதென. | இனங்காணப்படாத நேரடி செலவு வைப்புக்களை உரியவாறு இனங்காண முறைமையொன்றை இஸ்தாபிக்க வேண்டும். |
| (இ) | நிறுவனத்தின் சேவைகளை பெற்றுக் கொள்ள வாடிக்கையாளர்களால் நிகழ்நிலை முறையில் வங்கியில் வைப்புச் செய்த காசு இரட்டை கணிப்பீடு ஆகியுள்ளதால் நிதிக்கூற்றுக்களில் கடன்படுனர் ரூபா 4,844,388 குறைத்தும் மற்றும் காசு மீதி அப் பெறுமதியால் கூட்டியும் காட்டப்பட்டிருந்ததுடன், அப் பெறுமதி மாற்றப்படாத வைப்பாக வங்கி இணக்கக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இது கணனி மென்பொருள் தவறாகும். எதிர் காலத்தில் இந்நிலைமையை தவிர்த்துக் கொள்ள நிகழ்நிலை முறையில் செய்யப்படும் வைப்புக்கள் மாற்றப்பட்ட திகதியில் கணக்கீடு செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | இரட்டை கணிப்பீடு தவறை தவிர்த்துக் கொள்ள கணக்கீட்டு நடவடிக்கைகளை உரியவாறு மேற்கொள்ள தேவையான கட்டுப்பாட்டு முறையை பேணிச் செல்ல வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதி செயலாற்றல் கூற்றிற்கு தாக்கம் செலுத்தியிருந்த ரூபா 49,666,848 ஐயக்கடன் ஒதுக்கீட்டு காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதியல்லாத கொடுக்கல் வாங்கலின் கீழ் ஆண்டின் மிகைக்கு செம்மையாக்கப்பட்டு இருக்கவில்லை. | ஐயக்கடன் ஒதுக்கீட்டை காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு செம்மையாக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | காசுப் பாய்ச்சல் கூற்றை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (உ) | நிதிநிலைமை கூற்றில் திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கியிருந்த ரூபா 9,676,185 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் காசல்லாத கொடுக்கல் வாங்களின் கீழ் செயற்பாட்டு மிகைக்கு செம்மையாக்கப்பட்டிருந்தது. | இதனை பரீட்சித்து காசப் பாய்ச்சல் கூற்றிலிருந்து அகற்றி தயாரிப்பதென. | காசுப் பாய்ச்சல் கூற்றை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஊ) | காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் தேறிய செயற்படு மூலதனத்தின் வித்தியாத்தை செம்மையாக்கும் போது நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்களின் வித்தியாத்தை செம்மையாக்க வேண்டிய போதும், அதன் கீழ் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பித்துள்ள முதலீட்டு குறைப்பனவு ரூபா 40,000,000 தொகை செம்மையாக்கப்பட்டி இருக்கவில்லை. | இந்த முதலீடுகள் 03 மாதங்களை விஞ்சிய முதலீகளாகையால் நடைமுறையல்லாத முதலீட்டினுள் செம்மையாக்கப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்றை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (எ) | சீனா இலங்கை உயிரியல் தொழிநுட்ப ஆய்வுகூடத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்காக 2019 ஆண்டிலிருந்து மீளாய்வாண் வரை செய்யப்பட்ட மொத்த செலவான ரூபா 40,711,887 நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலைகளின் (working progress) கீழ் உள்ளடக்காது பெறவேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிறைவு செய்யப்பட்ட வேலைகளின் அளவு சொத்து / செலவின கணக்கிற்கு மாற்றப்பட்டு எஞ்சிய அளவு மீதியொன்றாக முன்கொண்டு செல்லப்பட்டுள்ளதாக மற்றும் இது ஒரு கருத்திட்டம் ஆகையால் நிறுவன நடைமுறை வேலைகளில் உள்ளடக்கப்படவில்லையென. | சரியான முறையில் செலவுகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை**

| | விடயம் | நிதிக்கூற்று பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கை பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | கடன்படுனர் மீதி | 77,960,928 | 74,544,110 | 3,416,818 | வித்தியாசத்திற்காக காரணத்தை கண்டறிய தேவைான இணங்கம் செய்யப்பட்டு வருவதென. | கடன்படுனர் காலப் பகுப்பாய்வில் கடன்படுனர் மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களில் மீதி ஒன்றுக் கொன்று இணங்க வேண்டும். |
| (ஆ) | பணிக்கொடை ஒதுக்கீடு | 14,288,849 | 15,258,114 | 969,295 | இத நிதிக்கூற்றுக்கள் இணக்கம் செய்யும் ஏற்பட்ட தட்டச்சு தவறாகும் | சரியான ஒதுக்கீட்டு பெறுமதிகளை உள்ளடக்கி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | விடயம் | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பெறவேண்டிய மீதிகள் | 5,143,900 | மீளாய்வாண்டு இறுதிவரை ஆண்டு 03 முதல் 16 ஆண்டுகள் வரையான காலமாக பெற வேண்டிய 11 மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான தகவல்கள்/ அட்டவணைகள் | ஆண்டு 10 இற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் மீதிகளை எதிர்வரும் ஆண்டுகளில் பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதுடன் மீள் செலுத்த முடியுமான ஆகாய பயணச் சீட்டுக்களிற்கு பணம் அடுத்த ஆகாய பயணச் சீட்டுக்களை கொள்வனவு செய்யும் போது, பதிலீடு செய்ய நடவடிக்கை எடுக்க முடியுமென குறித்த நிறுவங்களை அறிவுருத்தியுள்ளதென. | பெறவேண்டிய மீதிகளிற்காக முறையான உறுதிப்படுத்தல்களை ஒவ்வொறு ஆண்டிறிதியிலும் பெற்றுக் கொள்ள இயலுமானவாறு தகவல்களை பேணிச் செல்ல வேண்டும். அம் மீதிகளை அறவிட விசேட செயன்முறையை பின்பற்ற வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | வங்கிக் கணக்கு களிற்கு இடையே காசு பரிமாற்றம் | 59,844,380 | மாற்றுவதற்குரிய முறையான அங்கீகாரம். | பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | வங்கிக் கணக்கு களிற்கு இடையே காசு பரிமாற்றம் போது முறையான எழுத்துமூல அங்கீகாரத்துடன் செய்ய வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய நிதி**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய மீதியினுள் காணப்படும் ரூபா 94,691,793 ஆன் மீதி ஆண்டு 2 இற்கும் 17 இற்கும் இடையிலான காலமாக நிலவிவருவதுடன் அம்மீதியினுள் வெளிநாட்டு புலமைப்பரிசில் உடன்படிக்கை நிபந்தனைகளை மீறிய 19 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 16,561,557 காணப்பட்டது. மேலும், 2022 ஆண்டு முதல் அரச கூட்டுத்தாபனம் [illegible] வேண்டிய ரூபா 11,415,309 ஆன மீதிக்காக மொத்த பெறுமானத்திற்கும ஐயக்கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டு 10 இற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் மீதிகளை எதிர்வரும் ஆண்டுகளில் பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதுடன் வெளிநாட்டு புலமைப்பரிசில் உடன்படிக்கை நிபந்தனைகளை மீறிய 17 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,420,392 தொகையை அறவிட இயலாது போனது அந்த அலுவலர்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளதால் ஆகும். அவர்களின் அநேக பிணையாளர்களும், நாட்டை விட்டு வெளியில் சென்றுள்ளதுடன் சில உயிருடன் கூட இல்லை.<br>ரூபா 12,541,165 பெறுமதியான உடன்படிக்கையை மீறிய இரண்டு அலுவலர்களிற்கு தேவையான நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தற்போது மேற்கொண்டு வருவதென. | பெற வேண்டிய மீதிகளை கூடிய விரைவில் அறவிட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய நிதி**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டிலிருந்து செயற்படாத 08 கருத்திட்டங்களின் கூட்டுத் தொகை ரூபா 8,768,889 மீதியை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த நிறுத்தி வைத்தல் மீதியை குறித்த அலுவலர்களின் உறுதிப்படுத்தல் மீது மீள்செலுத்த அல்லது வருமானத்திற்கு எடுக்க தேவையான நடவடிக்கை செய்வதென. | குறித்த மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 371(5) மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கை | கொள்வனவிற்காக வழங்கியிருந்த ரூபா 25,496,730 ஆன 2018 முதல் 2023 வரை முன்கொண்டு வரப்படும் தீர்க்கப்படாத முற்பண மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த முற்பணங்களிற்கு உரிய வேலைகளை விரைவில் நிறைவேற்றப் படுகின்றன. | குறித்த ஆண்டின் திசெம்பர் 31 திகதி அன்று முற்பணம் தீர்க்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 756 | 2023 ஆண்டின் பண்டக கணிப்பீட்டு அறிக்கையை கண்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 பண்டக கணிப்பீட்டு தற்போது இடம்பெற்று வருகின்றது. | உரிய தினத்தில் கணிப்பீட்டு நடவடிக்கைகளை நிறைவு செய்து அறிக்கையை கண்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டும். |
| (iii) | 2021 நவம்பர் 16 இன் 01/2021 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்திய பொது முயற்சியாளர்கள் தொடர்பான செயற்பாட்டு கைநூலின் 6.6 பந்தி | மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த அறிக்கையின் நகழ் பிரதியொன்றை கணக்காய்வு திகதிய 2024 ஜுன் 03 திகதி வரை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | மிக விரைவில் கணக்காய்வாளர் நாகத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் உரிய தினத்தில் வருடாந்த அறிக்கை நகழ் பிரதி சமர்பிக்கப்பட வேண்டும். |

**1.8 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதின்று செயலற்ற 3 வங்கிக் கணக்குகளில் ரூபா 2,443,512 ஆன மீதி காணப்பட்ட போதும் அந்த மீதியை 07 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பயன்படுத்த அல்லது முதலீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பல்வேறு பணிகளிற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த கணக்குகளின் தொகையை எதிர்காலத்தில் நிறுவனத்திற்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதென. | செயலற்ற வங்கிக் கணக்கு மீதிகளை பயன்படுத்த அல்லது முதலீடு செய்ய தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 92,240,946 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நெரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 27,510,988 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 64,729,958 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் ஐயக்கடன் ஒதுக்கீடு ரூபா 61,774,962 இனால் மற்றும் ஒப்பந்த சேவைகள் செலவுகள் ரூபா 37,495,718 இனால் அதிகரித்த போதும் நிலையான சேவை வருமானம் ரூபா 71,669,307 இனால் மற்றும் மீண்டுவரும் மானியம் ரூபா 100,000,000 இனால் அதிகரித்தமை இந்த வளர்சிக்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 முதல் 2022 வரையான காலத்தினுள் பெறுமதி ரூபா 85,738,759 ஆன பொது திறைசேரி ஏற்பாட்டினை செலவிட்டு நிறைவு செய்யப்பட்ட 59 ஆராய்சிகளிற்கு இடையே, ரூபா 28,625,249 ஆன 18 ஆராய்சிகளிற்குரிய 56 தொழிநுட்பங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன. அவ்வாறாயினம் அவற்றில் 04 ஆராய்சிகளிற்கு உரிய 6 தொழிநுட்ப ஒப்படைப்புகள் மாத்திரம் செய்யப்பட்டிருந்தன. ரூபா 27,039,217 செலவிடப்பட்ட 14 ஆராய்சிகளிற்கு உரியதாக ஆண்டு 01 முதல் 03 வரையான காலத்தை செலவிட்டு அபிவிருத்தி செய்திருந்த 50 தொழிநுட்பங்கள் கணக்காய்வு நிறைவிலும் ஒப்படைத்து இருக்காததால் இந்த தொழிநுட்பங்கள் காலாவதியாதல் மற்றும் ஆக்கபூர்வ பயன்பாட்டால் அடைந்து கொள்ள முடியுமான பொருளாதார நலன்கள் நாட்டிற்கு இழக்கப்பட்டிருந்தன. அவவாறே ஆராய்சிகள் மூலம் கண்டுபிடித்த தீர்வுகள் ஊடாக, சுகாதார, சுற்றாடல் போன்ற பல்வேறு துறைகளில் இனங்கண்ட பிரச்சினைகளை சரிசெய்ய ஈடுபடாததன் மீது குறைந்தபட்ச பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | தொழிநுட்ப பரிமாற்ற முறைமையை மேலும் வலுவூட்டி அதிகளவான தொழிநுட்ப பரிமாற்ற அளவை மேற்கொள்ளும் நோக்கில் எண்ணத்தில் ITI Business Center (ITI வியாபார நிலையம்) அன்மையில் தாபிக்கப்பட்டதென. | நிறைவு செய்த ஆராய்சிகளின் தொழிநுட்பங்களின் தொழிநுட்ப கண்டுபிடிப்புக்களை உரியவாறு அபிவிருத்தி செய்ய வேண்டியதுடன் புதிய தொழிநுட்பங்களை நாட்டு நலன்களிற்கு பயன்படுத்தக் கூடியவாறு தொழிநுட்பகளை ஒப்படைக்க தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிறுவன ஆராய்சிக் குழு ஆராய்சிப் படிகளாக 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் ரூபா 59,915,608 செலுத்தியிருந்த போதும் நிறுவனம் தாபிக்கப்பட்ட அடிப்படை நோக்கமான இலங்கயைின் தொழிநுட்ப மட்டத்தை உயர்த்துவதற்காக உற்பத்திகளின் தரத்தை, கைத்தொழில்களில் பயன்படுத்தும் செயன்முறை மற்றும் முறைகளை மேம்படுத்துதல் மற்றும் கைத்தொழில்களின் பயன்பாட்டிற்கு புதிய செயன்முறைகள் மற்றும் மூல உத்திகளை கண்டு பிடிப்பதற்காக ஆராய்சிகளை மேற்கொள்ளல் ஆகிய துறைகளிற்கு போதிய பங்களிப்புக்களை வழங்கியிருக்கவில்லை. | தற்போதளவில் இது முழுமையாக அரசாங்கத்தை சார்ந்திருக்கும் நிறுவனம் ஒன்றல்லாததுடன் கைத்தொழில்களின் தேவைக்கு ஏற்ப ஆராய்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதென. | ஆராய்சிப் படிகளை செலுத்தும் போது தொழிநுட்ப கண்டுபிடிப்புக்களின் ஆக்கபூர்வத் தன்மை மற்றும் வெற்றியை மதிப்பீடு செய்யவும் வேண்டும். |
| (இ) | 2003 - 2013 இடையிலான கால பகுதிக்கிடையே கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 9,943,423 ஆன ஆய்வுகூட உபகரணங்கள் பயன்படாது காணப்பட்ட போதும் அவற்றை உரியவாறு திருத்துவதற்கு அல்லது விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த உபகரணங்களை திருத்துவது சாதகமற்றதால் பராதீனத்திற்காக நடவடிக்கை எடுப்பதென. | பயன்படுத்தாத ஆய்வுகூட உபகரணங்களை உரியவாறு பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | CML (Chemical & Microbiological Laboratory) பிரிவிற்குரிய ரூபா 2,367,736 ஆன இயந்திர பொறிகள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள், கணனிகள் மற்றும் கணனி உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 2022 ஆண்டு முதல் பௌதீக ரீதியா ஒப்பாய்வு செய்யப்பட்டு இருக்கவில்லை. | இந்த உபகரணங்கள் அளவீடு செய்யப்பட்டு 2023 ஆண்டில் சொத்துக்களாக இனங்காணப்பட்டுள்ள தென. | அனைத்து சொத்துக்களும் வருடாந்தம், பௌதீக ரீதியாக ஒப்பாய்வு செய்யப்பட வேண்டும். |
| (உ) | பொருட்கள் தொழிநுட்ப ஆய்வுகூடத்தினால் கடந்த 05 ஆண்டு காலத்தினுள் ரூபா 9,020,103 ஆன திறைசேரி மானியத்தை பயன்படுதிதி செய்திருந்த 05 ஆராய்சி கருத்திடங்களில் கண்டுபிடித்திருந்த புதிய தொழிநுட்பங்கள் மீளாய்வாண்டு இறுதி வரை ஒப்படைக்கப்படாது பயன்படுத்தாது காணப்பட்டன. 2018 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இறப்பர் மற்றும் காரியப் பாவனைகள் நெநோ கலவையின் வெப்ப கடத்துதிறனை | ஏதாவது ஒரு ஆண்டில் தயாரிக்கப்பட்ட தொழிநுட்ப முறையை அவ்வாண்டிலேயே பரிமாற்ற முடியாத போதும் எதிர்வரும் ஆண்டுகளில் தொழிநுட்பத்தை பரிமாற்ற முடியுமென. | ஆராய்சியினூடாக கண்டுபிடிக்கும் புதிய தொழிநுட்பத்தை நாட்டு நலனிற்காக பயன்படுத்த தரப்பினரை தேடிக் கொள்ளும் வேலைத் திட்டமொன்றை அறிமுகம் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேம்படுத்தல், வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையை குறைப்பதற்காக நெநோ துகள்களின் ஆதாரவை பயன்படுத்துவ தொடர்பான ஆராய்சி, சுற்றாடலிற்கு தீங்கிழைக்கும் பொலிதீனிற்கு பதிலாக பயன்படுத்த முடியுமான சூழல் நேய பொலிதீன் மற்றும் உணவுத் தாழ் தயாரிப்பிற்கு பொருத்தமான தொழிநுட்பத்தை பயன்படுத்துவது போன்ற ஆராய்சிகள் செய்யப்பட்டிருந்த போதும், தொழிநுட்பத்தை பயன்படுத்தும் தரப்பினரை இனங்கண்டிருக்கவில்லை. உள்நாட்டு வளங்களிற்காக பெறுமதி சேர்க்கும் தொழிநுட்பத்தினூடாக அவற்றின் வினைத்திறனான பயன்பாட்டை உயர்த்தும் நலன்களையும், உள்நாட்டு கைத்தொழிற் துறைக்கு பயன்படுத்தும் சந்தர்ப்பமும் நழுவவிடப்பட்டிருந்தன. | | |
| (ஊ) | புதிய தொழிநுட்பத்தை ஒப்படைப்பதற்காக கைத்தொழிலாளர்களை தேடிக் கொள்ள மிகவும் சக்திவாய்ந்த சந்தைப்படுத்தல் வேலைத் திட்டமொன்றை பயன்படுத்தாததால் தொழிநுட்ப ஒப்படைப்பின் மீது நிறுவனத்தின் வருமானம ஈட்டும் இயலுமை மட்டுப்படுத்தப்பட்டு இருந்தது. | ITI Business Center (ITI வியாபார நிலையம்) ஊடாக சக்திவாய்ந்த சந்தையொன்றை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆராய்சியினூடாக கண்டுபிடிக்கும் புதிய தொழிநுட்பத்தை நாட்டு நலனிற்காக பயன்படுத்த தரப்பினரை தேடிக் கொள்ளும் வேலைத் திட்டமொன்றை அறிமுகம் செய்ய வேண்டும். |
| (எ) | நிறுவனத்தில் உரியதாக 486 தொழிநுட்பங்கள் காணப்பட்ட போதும், அவ்வாறான தொழிநுட்பத்தை பௌதீக ரீதியாக ஆவணப்படுத்தி அல்லது திட்டவட்டமாக காப்பகமொன்றில் மென்பொருளாக ஏனும் சேமித்திருக்கவில்லை. இதன் காரணமாக ஆராய்சி மேற்கொண்ட ஆராய்சியாளர்கள் நிறுவனத்திலிருந்து விலகுதல், ஓய்வுபெறல், மரணித்தல், வேறு நிறுவனங்களிற்கு செல்லல், வெளிநாடு செல்லல் போன்ற சம்பவங்களின் மீது அந்த தொழிநுட்பமும் நிறுவனத்திற்கு இழக்கப்படும அபாயம் காணப்பட்டது. | தொழிநுட்ப தரவுகளை (தொழிநுட்ப அளவுத் திட்டத் தரவு) களஞ்சியப்படுத்த தொழிநுட்ப வங்கியொன்றை நடாத்திச் செல்வது காலத்திற்கு உகந்ததாகும். | தொழிநுட்பத்தை பயன்படுத்துதல் உரியவாறு பாதுகாக்கப்பட வேண்டியதுடன் புதிய தொழிநுட்பத்தை நாட்டு நலனிற்காக பயன்படுத்த முடியுமானவாறு தொழிநுட்பத்தை ஒப்படைக்க தேவையான வினைத்திறனான செயன்முறையை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | அபிவிருத்தியடைந்த நாடுகளின் உயர் மருந்தக ஆய்வுகூடங்களிற்கு சமாந்திரமாக வசதிகளுடன் கூடிய ஜீஎல்பீ (GLP) நிலைமைகள் உள்ளடங்களாக அங்கீகாரம் பெற்ற அதிநவீன ஆய்வுகூடமொன்றை திறைசேரி ஏற்பாடுகளினால் ரூபா 99,423,972 செலவில் நிறுவனத்தினுள 2019 ஆண்டிலிருந்து பேணிச் சென்றிருந்ததுடன், நாட்டிலுள்ள வைத்தியசாலைத் தொகுதி உள்ளடங்களாக அனைத்து மேற்கத்தேய மருந்துகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் விநியோகிக்கும் போது தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால் மேற்குறித்த ஆய்வுகூடத்தின் சேவைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக இரசாயனகூடத்தை தாபித்ததன் பிரதான நோக்கமான இலங்கையில் மருந்தகத் துறையின் அபிவிருத்திக்காக சுயாதீன அங்கீகாரம் பெற்ற மூன்றாம் தரப்பு ஆய்வுகூடமாக இந்த ஆய்வுகூடம் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | உள்நாட்டில் உற்பத்தி செய்யும் கமபனிகளினால் இறக்குமதி செய்யப்படும் மருத்துவ உற்பத்திகளின் பரீட்சிப்பினை முறையாக்க அரசின் வழிகாட்டல் மற்றும் நிதி உதவியின் அடிப்படையில் ஆய்வுகூடங்கள் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை ஆரம் பதிவு மற்றும் பின்னர் வருடாந்த பதிவிற்காக மருந்துகள் உற்பத்திகளின் தரம் தொடர்பாக மூன்றாம் தரப்பினர், சுயாதீன விசாரணையை கட்டாயப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சு கொள்கை ரீதியான மாற்றமொன்றை செய்யுமென எதிர்பார்த்த போதும் மூன்றாம் தரப்பு பரிசோதிப்புக்கள் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் கட்டாயப்படுத்தாததால் மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் நிறுவனத்திற்கு சமுகமளிப்பதில்லையென. | இவ்வாறான பாரிய மூலதன செலவுகளைக் கொண்ட கருத்திட்டங்களை ஆரம்பிப்பதால் சாத்தியப்பாட்டு ஆய்வு மற்றும் திட்டத்தின் மீது செய்ய வேண்டும். இந்த இரசாயனகூடத்தை தாபித்ததன் முக்கிய நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறமையினமைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆகஸ்ட் 31 திகதிய இலக்கம் அப/16/1576/19/96 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தல்களிற்கு இணங்க மூன்றாம் தரப்பினரான பெற்றோலிய உற்பத்தியின் பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்காக உபகரணங்களை கொள்வனவு செய்ய மற்றும் பொருத்துவதற்கு ரூபா 117.7 மில்லியன் செலவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த பெற்றோலிய மற்றும் உராய்வு எண்ணெய் ஆய்வுகூடத்திற்காக பெற்றோலிய மாதிரிகளை அனுப்பும் முறையொன்று உருவாக்கப் படாததால் ஆய்வுகூடத்தை | இந்த பெற்றோலிய இரசாயனகூடத்திற்காக உரிய அதிகாரம் இல்லாததால் அனைத்து மாதிரிகளும் எமது இரசாயனகூடத்திற்கு கிடைப்பதில்லை. இந்த செயன்முறை தேசிய தேவைப்பாடக இருப்பதால் அதற்காக எரிசக்தி அமைச்சின் மற்றும் பொதுப் பயன்பாட்டுகள் ஆணைக்குழுவின் முழுமையான அர்பணிப்புடன் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கூடிய விரைவில் செயற்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதென. | பெற்றோலிய மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் முறைமையொன்றை ஸ்தாபிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஸ்தாபித்ததன் அடிப்படை இலக்குகள் அடையப் பெற்றிருக்கவில்லை. தற்போது நாட்டிற்கு இறக்குமதி செய்யும் பெற்றோலியத்தின் தன்மை தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுவதாக பொது மக்கள் அபிப்பிராயமொன்று நாட்டில் காணப்படும் போது இந்த செயற்பாடுகளிற்காகவே ஸ்தாபிக்கப்பட்ட ஆய்வுகூடத்தில் உரிய செயற்பாடுகள் இடம்பெற்றிருக்கவில்லை. | | |

## 3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்கள்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தற்போது மருந்துகளிற்குரிய பரிசோதனை சேவைகளை வழங்குவதற்காக நிறுவனத்திற்கு தேவையான மாலபேயில் அமைந்துள்ள மருந்து தொழிநுட்ப பிரிவினுள் (Malabe Herbal Technology Section) உள்ள ரூபா 2,202,614 பெறுமதியான 04 இயந்திர உபகரணங்கள் செயற்பாடின்றி காணப்படுவதுடன் கணக்காய்வு திகதிய 2024 மே 31 திகதி வரையும் அந்த இயந்திரங்களை திருத்துவதற்கு அல்லது பொருத்தமானவாறு பராதீனம் செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | Pilot Freeze Dryer மற்றும் GR Microwave System இயந்திரத்தின் ஒரு பகுதியை திருத்துவதற்கு பெறுகைகள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஏனைய அனைத்து சொத்துக்கள் பதிவேடுகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதென. | திருத்தங்களை மேற்கொண்டு இயந்திர உபகரணங்களை செயற்படு நிலைக்கு கொண்டுவந்து பயன்படுத்த வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிறுவனத்தின் அங்கீகார ஆளணியினர் 439 ஆன போதும் உள்ளவாறான ஆளணியினர் 286 ஆனதில் 44 பதிவிகற்குரியதாக 153 வெற்றிடங்கள் காணப்பட்டன. | ஆட்சேர்பினை தற்காலிகமாக இடைநிறுத்தும் அரசின் கொள்கை காரணமாக ஆட்சேர்பிற்காக நிதி அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வது கடினமாவதுடன் தற்போது முறைாய ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வருதென. | வெற்றிடங்களை நிறப்பிக் கொள்ள தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |